

திருச்சி எடமலைப்பட்டி புதூரில் பண்டிகை தின விழாவை முன்னிட்டு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மாவட்டத் துணைச் செயலாளர் முத்து செல்வம் ஏற்பாட்டில் நடைபெற்ற நலத்திட்ட உதவி வழங்கும் விழாவில் பங்கேற்று ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கும், தூய்மை பணியாளர்களுக்கும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் இலவச வேஷ்டி, சேலைகளை வழங்கி மகிழ்வித்தார். நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ், காஜாமலை விஜய், கோட்டத் தலைவர்கள் துர்கா தேவி, விஜயலட்சுமி கண்ணன் மற்றும் புஷ்பராஜ் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# 193 கழக உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு குடும்ப நலநிதி!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், அக். 23 - நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகரம், மற்றும் சேந்தமங்கலம் ஒன்றியம், சேந்தமங்கலம் பேரூர், காளப்பநாயக்கன் பட்டி பேரூர் பகுதிகளில் மறைந்த 193 கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதியை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்.

கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் வழிகாட்டுதலுடன்

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி மாவட்டச் செயலாளர் பொறுப்பு வகித்ததில் இருந்து நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் மறைந்த கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதியை வழங்கி வருகிறார்.

அதன்படி நாமக்கல் கிழக்கு மாவட்ட மறைந்த கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு முத்தமிழ் அறஞர் கலைஞர் குடும்ப நலநிதி வழங்கும் நிகழ்ச்சி நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள மாவட்ட திமுக அலுவலகம், கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட, மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட திமுக மாவட்ட அவைதலைவர் சி.மணிமாறன், நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த், நாமக்கல் மாநகராட்சி மேயர் கலாநிதி,

துணை மேயரும், நாமக்கல் கிழக்கு நகர செயலாளருமான பூபதி, மேற்கு நகர செயலாளர் சிவக்குமார், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் ராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாமக்கல் கிழக்கு நகரத்தில் 16 பேர், நாமக்கல் மேற்கு நகரத்தில் 32 பேர், நாமக்கல் தெற்கு நகரத்தில் 24 பேர் என திமுக நிர்வாகிகளின் குடும்ப உறுப்பினர்கள் 72 மறைந்தவர்களின் குடும்பத்திற்கு தலைவர் கலைஞர் குடும்பநல நிதியை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார். முன்னதாக மறைந்த கழக நிர்வாகிகள் புகைப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தி, நிர்வாகிகள் அனைவரும் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் நகர திமுக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல் சேந்தமங்கலத்தில் கழக உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்பநிதி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளரும், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினருமான கு.பொன்னுசாமி, சேந்தமங்கலம் ஒன்றிய கழக செயலாளர் அ.அசோக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சேந்தமங்கலம் ஒன்றியம் 72 பேர் , பேரூரில் 30 பேர், காளப்பநாயக்கன்பட்டி பேரூரில் 19 பேர் என மொத்தம் 121 கழக உறுப்பினர்களுக்கு கலைஞர் குடும்ப நல நிதி வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பேரூர் கழக செயலாளர்கள் தனபாலன், முருகேசன், வார்டு கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் ஆனந்த்பாபு, சாம்சம்பத், பொன். சித்தார்த், கிருபாகரன், கலைவாணன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ரஷ்ய எண்ணெய் இறக்குமதி - ஆபரேசன் சிந்தூர் விவகாரங்கள்

# டிரம்ப் பேசும் போதெல்லாம் - பிரதமர் மோடி ‘மவுனி பாபா’ ஆகிவிடுகிறார்!

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, அக். 23 - ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறு த்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் மீண்டும் எச்சரித்துள்ள நிலையில், இவ்விவகாரத்தில் பிரதமர் மோடி மவுனம் காப்பதாக காங்கிரஸ் கட்சி கடுமையாக குற்றம் சாட்டியுள்ளது. உக்ரைன் - ரஷ்யா மோதல் தொடங்கியதிலிருந்து, சர்வதேச எதிர்ப்புகளை மீறி இந்தியா ரஷ்யாவிடமிருந்து சலுகை விலையில் கச்சா எண்ணெயை அதிகளவில் இறக்குமதி செய்து வருகிறது. இதற்கு அமெரிக்கா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்தியாவின் இந்தச் செயல், உக்ரைன் மீதான போருக்கு ரஷ்யாவுக்கு நிதியுதவி செய்வது போல் உள்ளது என அமெரிக்கா குற்றம்சாட்டி வருகிறது. இந்நிலையில், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை நிறுத்தி க்கொள்வதாக பிரதமர் மோடி தன்னிடம் உறுதியளித்ததாக அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த சில நாட்களுக்கு முன்பு தெரிவித்திருந்தார்.

ஆனால், இதனை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் திட்டவட்டமாக மறுத்தது.

பிரதமர் மோடிக்கும், அமெரிக்க அதிபர் டிரம்புக்கும் இடையே சமீபத்தில் எவ்வித தொலைபேசி உரையாடலும் நடைபெறவில்லை என்றும் விளக்கம் அளித்திருந்தது. இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள பதிவில், ‘ரஷ்யாவிடமிருந்து இந்தியா எண்ணெய் இறக்குமதி செய்யும் விவகாரத்தை கடந்த ஐந்து நாட்களில் மட்டும் அமெரிக்க அதிபர் டிரம்ப் மூன்று முறை எழுப்பியுள்ளார். புடாபெஸ்டில் ரஷ்ய அதிபர் புதினை சந்திப்பதற்கு முன்பு இந்த எண்ணிக்கையை அவர் இன்னும் அதிகரிப்பார் என்பதில் சந்தேகமில்லை.

தனது நல்ல நண்பரான மோடியிடம் அவர் பேசியதாகவும், இறக்குமதியை நிறுத்த இந்தியா உறுதியளித்துள்ளதாகவும் டிரம்ப் கூறுகிறார். ஆனால், அத்தகைய உரையாடல்கள் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறுகிறது. வெளியுறவுத்துறையின் இந்த மறுப்பை டிரம்ப் தெளிவாக நிராகரித்து ள்ளார்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ‘ஆபரேஷன் சிந்தூர்’ விவகாரத்திலும், ரஷ்ய எண்ணெய் இறக்குமதி விவகாரத்திலும் டிரம்ப் பேசும்போதெல்லாம் பிரதமர் மோடி ‘மவுனி பாபா’ ஆகிவிடுகிறார் என்றும் அவர் கடுமையாக சாடியுள்ளார். இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை முற்றிலும் சிதைந்துவிட்டதாகவும், பிரதமர் மோடி அமெரிக்க அதிபர் டிரம்பைக் கண்டு அஞ்சுகிறார் என்றும் காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.



நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகரம் மற்றும் சேந்தமங்கலம் ஒன்றியம், சேந்தமங்கலம் பேரூர், காளப்பநாயக்கன்பட்டி பேரூர் பகுதிகளில் மறைந்த 193 கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதியை நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சி.மணிமாறன், கு.பொன்னுசாமி எம்.எல்.ஏ, அ.அசோக்குமார், கலாநிதி, பூபதி, ராணா ஆனந்த், சிவக்குமார், ராணி, தனபாலன், முருகேசன், வார்டு கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் அருகே வீரசோழபுரத்தில் பொதுப்பணித்துறையின் சார்பில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடக் கட்டுமானப் பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (21.10.2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்டம், திண்டல்மலை வேலாயுத சுவாமி திருக்கோவிலில் நடைபெற்று வரும் இராஜகோபுரம் அமைக்கும் பணியினை வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### ஈரோடு மாவட்டத்தில்

# வடகிழக்கு பருவ மழையால் தரைப்பாலம் பாதிப்பு!

## அமைச்சர் சு.முத்துசாமி ஆய்வு – நிவாரணப் பணி!

ஈரோடு, அக். 23 - ஈரோடு மாவட்டம், பல்வேறு பகுதியில் பெய்த வடகிழக்கு பருவ மழை வெள்ளத்தால் தரைப்பாலம் பாதிப்படைந்ததை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சத்தியமங்கலம் வட்டம், இக்கரை நெகமம் கிராமம் பகுதியில் உள்ள தரைப்பாலம் வடகிழக்கு பருவ மழை வெள்ளத்தால் பாதிப்படைந்ததை நேரில் சென்று பார்வையிட்டு, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 19.10.2025 மற்றும் 21.10.2025 ஆகிய தேதிகளில் சுற்று வட்டார பகுதி மற்றும் திம்பம் வனப் பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக காற்றாற்று வெள்ளம் ஏற்பட்டு, இக்கரைநெகம புதூர் பிஞ்சமேடு சாலையில் ஓடைக்கு குறுக்கே அமைத்துள்ள குழாய் தரை 200 நீலத்திற்கு முற்றிலுமாக சேதமடைந்து சாலை போக்குவரத்து துண்டிக்கப்ப ட்டுள்ளது. மேலும் வெள்ளம் வடிந்த பிறகு சேதமடைந்த தரைப்பாலம் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டு போக்குவரத்து சீரமைக்கப்படும் எனவும் தெரிவித்தார். நிரந்தர சீரமைப்புக்காக உயர்மட்ட பாலம் அமைக்கும் பணியினை வரும் நிதியாண்டில் எடுத்துக்கொள்ள முன்மொழிவு அனுப்பப்படும் எனவும் தெரிவித்தார்

தொடர்ந்து கொங்கர் பாளையம் ஊராட்சியில் வடகிழக்கு பருவமழை வெள்ளத்தால் தரைமட்டப்பாலம் பாதிப்படைந்ததை நேரில் சென்று பார்வையிட்டு, வடகிழக்கு பருவ மழையினால் குண்டேரிப்பள்ளம் அணையிலிருந்து வெளியேற்றப்பட்ட அளவுக்கதிகமான வெள்ளத்தினால். பாலம் நிரம்பி போக்குவரத்து தடைபட்டு உள்ளது.

தற்போது தற்காலிக ஏற்பாடாக இருபுறமும் தற்காலிக தடை மற்றும் எச்சரிக்கை பலகைகள் அமைக்கப்பட்டுள்ளது. வெள்ளம் வடிந்த பின்னர் கான்கிரீட் குழாய்கள் அமைக்கப்பட்டு பழுதடைந்த தடுப்புச் சுவர்களை சரிசெய்தும் தற்காலிக சீரமைப்பு செய்யப்பட்டு போக்குவரத்து திறந்து விடப்படும் எனவும் தெரிவித்தார். சீரமைப்பு பணிகளை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி இ.ஆ.ப., அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாச்சலம், ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# தமிழ்நாட்டில் பருவமழை இயல்பை விட 59 சதவிகிதம் அதிகம் பெய்துள்ளது!

## வானிலை ஆய்வு மையத் தலைவர் பேட்டி!

சென்னை, அக்.23 - தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி இதுவரை இயல்பை விட 59 சதவீதம் மழை பதிவாகி உள்ளதாக வானிலை ஆய்வு மையத் தலைவர் அமுதா கூறியுள்ளார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் வானிலை ஆய்வு மைய தென்மண்டலத் தலைவர் அமுதா செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி இதுவரை இயல்பை விட 59 சதவீதம் மழை பதிவாகி உள்ளது. தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 22 இடங்களில் கனமழை பதிவாகி உள்ளது. தெற்கு அந்தமான் பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. அரபிக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காற்றழுத்த மண்டலமாக மாற வாய்ப்பு உள்ளது. ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறுமா என நாளை கூற முடியும். ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி மேற்கு திசையில் நகர்ந்து வட தமிழகம் அருகே மண்டலமாக வலுப்பெறும். சென்னையில் இருந்து 400 கி.மீ தொலைவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது. ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் உடனடியாக கரைக்கு திரும்ப அறிவுறுத்தப்பட்டுள்ளது. நேற்று 4 இடங்களில் அதிகனமழை பெய்துள்ளது. ராமநாதபுரம் தங்கச்சிமடத்தில் 17 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. சென்னையில் அதிகபட்சமாக மேடவாக்கத்தில் 10 செ.மீ மழை பதிவாகி உள்ளது. 10 மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு, 7 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

தமிழகத்தில் பதிவான மழையின் அளவு 16 செ.மீ; இயல்பு 10 செ.மீ. 16 மாவட்டங்களில் இயல்பு, இயல்பை விட மிக அதிகமாக கனமழை பதிவாகி உள்ளது. சென்னையில் மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.



மதுரை பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு முதலமைச்சர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உத்தரவின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பண்டிகைக்கு பின்பு, நேற்று முன்தினம் (21.10.2025) சென்னை உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கு இயக்கப்படுகின்ற சிறப்புப் பேருந்துகளின் இயக்கம் குறித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் பயணிகளிடம் தங்களின் பயணம், தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்து இருந்த பேருந்து வசதிகள் எப்படி இருந்தது என கேட்டார். பயணிகள் எங்களது பயணம் மிகவும் சிறப்பாக அமைந்தது முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி என தெரிவித்தனர். மக்களின் பாதுகாப்பான பயணமே ‘திராவிட மாடல்’ அரசின் இலக்கு என பயணிகளிடம் அமைச்சர் சா.சி. சிவசங்கர் கூறினார்.